# WORD OF CHRIST

# கிறிஸ்துவின் வசனம்




ஆசிரியர்
சகோ. அர்ச்சுனன் M.A., A.Bs.,

கிறிஸ்துவின் வசனம்
WORD OF CHRIST

மரம் 4 ஜூன் 1995 களி 11

# கிறிஸ்துவின் உபதேசம்
## Doctrine of Christ

கிறிஸ்துவின் உபதேசம் நம்மை நித்தியத்திற்கு நேராக வழிநடத்துகிறது. இந்த உபதேசத்தில் நிலைத்திருக்கிறவர்கள் என்றும் கைவிடப்படுவதில்லை. இந்த உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனே உடையவனல்ல. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன் என்று II யோ 9 ல், வாசிக்கின்றோம் மேலும், ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தை கொண்டுவராமலிருந்தால் அவனே உங்கள் வீட்டிலே ஏற்றுக் கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள் என்று பார்க்கிறோம். பிரிய நண்பரே கிறிஸ்துவின் உபதேசத்தைப் போலவே பிசாசு மனிதர்கள் மூலம் நம் வீடுகளுக்கு கொண்டு வருவதை இக்கடைசி காலங்களில் நாம் பார்க்க முடிகிறது இவர்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள் கள்ள உபதேசம் பன்னுகிறவர்களும் கபடமுள்ள வேலையாட்களுமாய் இருக்கிறார்கள் இப்படிப்பட்டவர்கள் உங்கள் விசுவாசமுள்ள முழு -குடும்பத்தையும் கவிழ்த்துப் போடுவார்கள். ஒருவன் கிறிஸ்துவின் உபதேசத்தை போதிக்கிரானா என்பதை கண்டு கொள்ள அவர்கள் சொல்லும் வேத வசனங்களை உற்றுக் கவனியுங்கள். அவைகள் புது உடன்படிக்கை அதாவது புதிய ஏற்பாடு வேத புத்தகத்திலிருந்து செய்தி கொடுக்கப்படுகிறதா என்று கவனிக்க வேண்டும். ஒரு வேளை நீங்கள் நினைக்கலாம் அப்படி என்றால் பழையஏற்பாடு புத்தகத்திலிருந்து செய்தி கொடுக்க கூடாதா? என்று கொடுக்கலாம் நம்முடைய நடைமுறை ஜீவியத்திற்க்கு கைக்கொள்ள வேண்டிய சத்தியம் கிறிஸ்துவின் உபதேசம் புதிய ஏற்ப்பாட்டில் தான் உண்டு.

இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்திலே நிலைத்திருந்தால் மெய்யாகவே என் ஜீவராயிருப் -பீர்கள்: யோ 8:31 இது கடினமாக இருகிறதே என்று சொல்லி

பின் வாங்குவதோ அல்லது மாற்றுவதோ சீஷர்களுக்கு உரிய தகுதியல்ல. ஆண்டவரோடு இருந்த சீஷரில் அநேகர் இவைகளைக் கேட்டபொழுது இது கடினமான உபதேசம் யார் இதைக்கேட்பார்கள் என்றார்கள் யோ 6:60 அதைப்போல நாமும கடினமான உபதேசம் என்று சொன்னால் நாம் நிச்சயமாகவே அவருடைய சீஷர்களாய் யிருக்க முடியாது. நீச்சல் பழகுவது மிக கடினமாகத்தான் இருக்கும் அதே வேளையில் நாம் பழகிவிட்டால் நமக்கும் நல்லது மற்ற -வர்களையும் காப்பாற்றமுடியும் அல்லவா, அதைப்போலத்தான் கிறிஸ்துவின் உபதேசம் கடினமாக தோனறுவது போல இருக்கும் அதிலே நிலைத்திருந்து தேவ ஆசீர்வாதங்களை அனுபவிக்கும்போது நமக்கு மிக பிரயோசனமாக இருக்கும் அதேவேளையில் மற்ற -வர்களையும் நம்மால் இந்த உபதேசத்திற்கு அழைக்க முடியும்

தேவ பக்தி இல்லாதவர்களுக்கு இந்த உபதேசம் பைத்தியமாக தோன்றும். காரணம்! சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, I கொ 1:18ல் வாசிக்கின்றோம் குடி குடியை கெடுக்கும் என்று படித்து விட்டும் குடிக்கிறவர்கள் அநேகர் இருக்கின்றார்கள் அதேபோல் கிறிஸ்துவின் உபதேசத்தை கேட்டாலே பைத்தியம் பிடிப்பதுபோல இருக்கிறது என்று சொல்லி கெட்டுப்போகிறவர்களும் இன்றும் அநேகர் இருக்கின்றார்கள். பிரியமானவர்களே! கிறிஸ்துவின் உபதேசம் நாம் இரட்சிக்கப்படுவதற்கு தேவ பெலனாயிருக்கிறது ஆகையால் இந்த உபதேசத்தை விடாது பிடித்துக் கொண்டு சுடர்களைப் போல பிரகாசிப்போம்! இந்த உபதேசத்தை பேசுகிறவர்களோடு ஐக்கியம் கொள்வோம்!! அவர்களை சகோதர சகோதரிகளாக, ஏற்றுகொள்வோம்!!! கிறிஸ்துவின் உபதேசம் நம்மனைவரோடுங்கூட இருந்து நம்மை வழிநடத்துவதாக ஆமென்.

★ சபை செய்திகள்:

1. தேவனுக்கு மகிமையாக ஊழியர் கருத்தரங்கு மே 18 19,20 ஆகிய தேதிகளில் திருச்சியில் ஹோட்டல் ஆஸ்பியில் சகோ P, பால்ராஜ் அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தது. தமிழ்நாடு மற்றும் ஆந்திரா மாநிலங்களில் இருந்து ஊழியாகள கலந்துகொண்டு கருத்தரங்கை சிறப்பித்தார்கள். சகோ, டென்னிஸ் ஜான்சன் - சென்னை அவர்கள் பாடங்களை நடத்தினார்கள்.

2. தேவனுக்கு துதியாக மே 18,19,20 ஆகிய தேதிகளில் திருச்சி கருமண்டபம் பகுதியில் கனிசேஷகூட்டமும் நடைபெற்றது.
3. கர்த்தருக்கு சித்தமானால் ஆகஸ்ட் 13,14,15 ஆகிய தேதிகளில் ஆந்திரா மாநிலம் விசாகப்பட்டினம் கிறிஸ்துவின் சபைமூலம் வேத வகுப்புகள் சகோ. G. தேவதானம்-சென்னை அவர்களால் நடத்தப்படும். கலந்து கொண்டு பயன்பெறுங்கள்.
குறிப்பு:- தூர பகுதியில் இருந்து வருகிறவர்களுக்கு உணவு இருப்பிட வசதி மட்டும் செய்து கொடுக்கப்படும் என்று சபை ஊழியர்கள் சகோ. P. செல்வராஜ் சகோ. L. V. Rao அறிவிக்கிறார்கள்.
4. பிப்ரவரி 19ம் தேதி அசோக்குமார் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள் இவருக்கு. சகோ டேவிட்ராஜாமணி மதுரை அவர்கள ஞானஸ்நானம் கொடுத்தார்கள் (எழும்பூர் ஊழியத்தின்போது சந்திக்கப்பட்டவர்.)
5. கிறிஸ்துவின் சபை ஊழியர் தேவை.
தொடர்பு கொள்க, தபால் பெட்டி எண் 5
வத்தலக்குண்டு-624202.

✝. ஏப்ரல் மாத வேத அறிவுப் போட்டியில் வெற்றிபெற்றவர்,
Mrs. VIJEYANTHA திருநெல்வேலி.

★ ஏப்ரல் மாத இதழின் விடைகள்

1. பார்வோன், யோசேப்புக்கு ஆதி 41:45
2. நாதாப், அபியூ லேவி 10:1,2
3. அப்சலோம் II சாமு 18:10
4. ஆழமான படுகுழி நீதி 22:14
5. அப்போஸ்தலர்கள். அப் 5:41
6. மூன்றாம் ஆற்றுக்கு
7. யோசேப்பு
8. சிமியோன்
9. சிறியவனைப் போலவும் பணிவிடைக்காரனைப் போலவும்.
10. அவர் நடந்தபடியேதானும்

✝ ஜூன் மாத வேத அறிவுப்போட்டி

1. ஒய்வு நாளில் சீஷர்கள் பசியாயிருந்து, எவைகளைக் கொய்து தின்னத் தொடங்கினார்கள்?
2. இரட்சிக்கப்படுகிற நமக்கோ எது தேவ பெலனாயிருக்கிறது?
3. நான் கட்டின இந்த ஆலயம் எம்மாத்திரம் என்றவன் யார்?
4. உங்கள் பார்வைக்குக் கள்ளர் குகையாயிற்றோ என்று எதைக் கர்த்தர் சொல்கிறார்?

5. தாவீதின் சகோதரர்கள் எத்தனை பேர்?

6. இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரை மறந்து எதைக் கட்டுகிறான்?

7. நீ நட்சத்திரங்களுக்குள்ளே உன் கூட்டைக் கட்டினாலும் அவ்விடத்திலிருந்தும் உன்னை விழத்தள்ளுவேன் என்று யார் சொல்கிறார்?

8. முதல் முதல் எங்கு சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்ற பெயர் வழங்கிற்று?

9. மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து என்ன செய்வாரென்று சொல்லியிருக்கிறார்?

10. யாரைப் பற்றிச் சொல்லிய மூல உபதேச வசனங்களை நாம் கைக்கொள்ள வேண்டும்?

மேற்கண்ட வினாக்களில் முதல் ஐந்திற்கு வேத ஆதாரத்துடனும் கண்டு ஐந்திற்கு விடை மட்டும் இம்மாத இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி அனுப்பிவைக்கவும்.

★ இம்மாத சிறுவர் வேத அறிவுப் போட்டி

பேதுரு புத்தகத்திலிருந்து நிரப்புக:

1. பொருளாசைகளில் பழகின ..... சாபத்தின் பிள்ளைகள்
2. ..... சேற்றிலே புரளவும் திரும்பினது.
3. கர்த்தருடைய நாள் இரவிலே..... வருகிற விதமாய் வரும்.
4. இயேசு கிறிஸ்துவின் கிருபையினாலும் அவரை அறிகிற ..... வளருங்கள்.
5. சகோதர சிநேகத்தோடே ..... கூட்டி வழங்குங்கள்.

எங்களோடு சேர்ந்து தேவனை
ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்

ஞாயிறு காலை 9-00
புதன் மாலை 6-30

கிறிஸ்துவின் சபை
கணவாய்பட்டி ரோடு
வத்தலகுண்டு-624202

இவ்விதழ் இலவசமாக
அனுப்பப்படுகிறது.




MONTHLY MAGAZINE News Paper
WORD OF CHRIST: Regd. No, 84661-92.
Registerd No TN/DDL/19

PRINTED MATTER

To

If undelivered please return to:

**THE EDITOR**
WORD OF CHRIST
Post Office Box No. 5.
**Batlagundu-624202.**
S. India

Edited and publised by B. Arjunan M.A.,A.Bs. on behalf of church of Christ 2.2.63A/22 Kanavaipatti Road BTL
Printed by C. Pandiyarajan B.Sc. SHANTHI PRINTING PRESS Main Road Batlagundu-624202.